*SEND IN YOUR NEWS TO*

THE EDITOR
THE MORNING STAR
NO. 39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.

UNIVERSITY OF JAFFNA LIBRARY 01 JAN 2002 PERIODICALS

# THE MORNING STAR

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*
*Established 1841. A Christian Weekly Published Every Friday*

Vol. 162 - Jaffna - Friday 12th OCTOBER 2001 No. 19

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

MORNING STAR RATES:
Annual Subscription-Foreign $ 10.00
Life Subscription Foreign $100.00
Annual SubscriptionLocal Rs. 100.00
Life Subscription - Local Rs.1000.00

THE MORNING STAR
NO. 39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.

## DR. SAMUEL F. GREEN AND BISHOP D.J. AMBALAVANAR

October 10 is an important date in the lives of two men who have had great influence in the American Ceylon Mission and the Jaffna Diocese of the Church of South India, one in its earliest days and the other in very recent times. Dr. Samuel Fiske Green, founder of Green Memorial Hospital, Manipay, was born on 10 October, 1822, and The Rt. Rev. Dr. D.J. Ambalavanar, our recent and much loved bishop, died on this date four years ago. Both men built institutions of the mino and of "bricks and mortar".

Dr. Green arrived in Jaffna on 3 October, 1847, to teach medicine at Batticotta Seminary. He says of his decision to answer God's call to mission: "Why is it not better for me to go where I can be very useful as well in my profession as otherwise; to go to a land of darkness and heal the bodies and enlighten the minds of some bounded people?" During his 27 years of service with the "American Board" he established a dispensary at Manipay to which he shifted his medical students, and he founded "Friends in Need Hospital" in Jaffna. During this time he became so expert in Tamil that he translated many medical texts and journals so he could educate 84 Tamils in their own language, thus multiplying his "healing of bodies" 84 fold.

In Dr. Green's maxims to his three daughters and his son we learn the importance to him of love of Jesus and love of his fellow man:

Growing, rejoice in the constant presence of Jesus.
Where Love leads, all prosper.
Win rather than drive.
Be free to commend and slow to blame.
Defer reproof till cool.
Be slow to promise, sure to perform.
By cheerfulness serve God and your neighbor.

In 1884, ten years after leaving Jaffna, he died in the company of his family. In his Will he said, "Should I ever have a gravestone, let it be plain and simple, and bear the following inscription:

Samuel Fiske Green 1822 - 1884
Medical Evangelist to the Tamils
Jesus My All !!!

One hundred fifty-three years later his hospital in Manipay is being served by Dr. Mrs. Chandra Ambalavanar, and his son Dayalan is "healing the bodies" of the descendents of the people Dr. Green served. Many of the qualities for which their husband and father, Bishop Ambalavanar, is most loved, admired and respected, were evident in him even as a young child, as his brother J.P. Ambalavanar relates.

(Please turn to page 4)

**4th YEAR REMEMBRANCE**

***Well done, Good and Faithful servant...***



***THE RT.REV.DR.D.J.AMBALAVANAR.***

## DIOCESAN FESTIVAL 2001

The Diocesan festival of this year was held on the 29th of September at the Cathedral church at Vaddukoddai. The number of the people gathered there once again reminded of the fact that the church is still growing despite the adversities and atrocities that cripple the functions of daily life.

At the opening service two of our workers were ordained for ministry. Rev.B.Thevathas worker in charge, Chankanai and Mr. I.Rajkumar worker in charge of Ghandi Kiramum were ordained as the presbyter and the deacon respectively.The Rev.Mrs.J.Ratnasingam, Minister, Kaddaiveely Methodist Church delivered a meaningful sermon.

The games that followed the service were a lively foot ball match held between the pastors and the laymen a net ball match between the Jaffna College Lady teachers and the Uduvil Girls' College Lady teachers and a volley ball match between the seminary students and other students. This event brought back the enthusiasm in the crowd which was missing for quite a while.



Rev. I. Rajkumar with Well-Wishes

About 1200 people enjoyed the fellowship lunch .The highlight of the afternoon programme which was held at the Ottly Hall, was the debate on the topic whether or not women should be ordained as presbyters. Moderated by Mrs. K.Bawasingam, Rev.Miss Ratnasingam, Rev.S.T.Joshua, and Mr.D.S.Solomon debated in favour of it and Rev.Benjamin Jeyarajah, Mrs.Sunithra Jebamohan and Rev. A.S.Thevagunandan debated against it. The entertainment programme that followed was a dance by the Uduvil Girls' College and a drama by the Christian Theological Seminary students. The events of the day came to a close by the vote of thanks and the benediction of the Bishop.



Laying of hand
The. Rev. B. Thevathas's ordination

## NEWS FROM VANNI

The KNH Sunday was observed in all the churches in the Vanni, on 23 September with special thanksgiving and a special message by guest speakers. In Konavil, the service was followed by a workshop. In Jeyapuram, a public meeting was held immediately after the morning worship service. At Murikandy, theDirector for Projects Mr. S. Ratnavel organized a special get-to-gether programme.

The CSI Day was marked with a special Holy Communion Service at the Christ the King Church, Kilinochchi on the 27th of September, 2001 at 7.30 a.m. All the workers of the CSI and many members of the churches around Kilinochchi participated in this special service.

The Colombo Church has come forward to help the poor people of the Vanni by providing cadjans for roofing. As the monsoon is approaching this help would be a great relief for the derserving. The Colombo Chuurch would help around 250 families. The Colombo Pastor Rev. P.R. Navendranugoolan is planning to visit Vanni in mid October to execute this programme.

### *Meditation.*

Give what you have, for you never know - to someone else It may be better than you can even dare to think.

*Wadsworth Longfellow*

**புத்தக உலகம்**

# இலண்டன் மிஷனரி சங்க திருவிதாங்கூர் சபைச் சரித்திரம்

**— 1806 — 1985 வரை**

எழுதியவர் : S. JOBFRED STEPHENS

வெளியீடு : SOUTH INDIA CONGREGATIONAL CHURCHES KANYAKUMARI DIST.

1947ம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை என்ற மகோன்த திருச்சபை ஐக்கியம் ஏற்பட்டது. இந்த அமைப்பிலே தென் இந்தியாவிலே இருந்த மெதடிஸ்த, அங்கிலிக்கன், கொங்கிரிகேஷனல், பிரஸ்பிட்டேரியன் சபைகளும் யாழ்ப்பாணத்தில் இருந்த கொங்கிரிகேஷனல் சபையும் இணைந்து கொண்டன. ஆனால் இந்த ஏற்பாடு அதிதீவிர மெதடிஸ்த சபையினருக்கும், அங்கிலிக்கன் சபையினருக்கும், கொங்கிரிகேஷனல் சபையினருக்கும் பிடிக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் இன்றும் கூட தமது உள்ளூர் சபைகளை தென் இந்திய திருச்சபையுடன் சேர்த்துக் கொள்ளாமல் தனியே நின்று தமது மரபின்படி வழிபாடுகளை நடத்தி வருகின்றார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் லண்டன் மிஷனரிச் சங்கம் (L. M. S.) ஊழியம் செய்தது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமாரைப்போல கொங்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்தவர்கள். தென் இந்தியத் திருச்சபை அமைப்பு கொங்கிரிகேஷனல் திருச்சபை அமைப்பில் ஊறி வளர்ந்தவர்களுக்கு பிடிக்கவில்லை. கொங்கிரிகேஷனல் சபை, சபை ஆளுகை முறையைக் கொண்டது. ஒவ்வொரு உள்ளூர் சபைக்கும் பல விடயங்களில் சுயாதீனம் உண்டு. மத்திய தலைமைப்பீடம் இவற்றிற்கு கட்டளையிட முடியாது.

இத்தகைய கொங்கிரிகேஷனல் மரபில் பல சந்ததிகளாக வளர்ந்தது தான் கன்னியாகுமரியைச் சேர்ந்த ஸ்டீபன்ஸ் குடும்பம். அவர்களில் ஒருவரான Jobfred STEPHENS அவர்களே இந்த நூலை எழுதியுள்ளார்.

இந்த நூல் யாருக்கு அர்ப்பணிப்பு செய்யப்படுகின்றது என்பதிலிருந்து இந்த நூலின் நோக்கம் புலனாகின்றது. அதன் வாசகங்கள் பின்வருமாறு:-

DEDICATION

To my Loving father late Mr. W. R. Stephen
and to those who suffered for the cause of
continuation of Congregational Church government
in the churches of Kaniyakumari District helped
to be founded by the London Missionary Society.

இந்த நூல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் கன்னியா குமரியில் கொங்கிரிகேஷனல் திருச்சபை வளர்ந்த வரலாறு கூறப்படுகின்றது. 1806ம் ஆண்டு றிங்கிள்தோப் என்ற மிஷனரியின் வருகையுடன் பெருந்தொகையான சாம்பவர், மற்றும் நாடார் திருச்சபையில் அங்கத்துவமாகின்றார்கள். இந்த வரலாற்றினை மிகவும் தெளிவாக எழுதியுள்ளார் Mr. JOBFRED STEPHENS. 1908ம் ஆண்டு பிரஸ்பிட்டேரியன் திருச்சபைகளும், கொங்கிரிகேஷனல் திருச்சபைகளும் இணைந்து S. I. U. C. அமைப்பை ஏற்படுத்தின. இதுவும் பேராயர் ஆட்சிமுறைக்கு எதிரான அமைப்பு என்கின்றார் ஆசிரியர்.

S. I. U. C. உருவாக்கப்பட்ட பின்னர் C. S. I. பற்றிய பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. அதன் வளர்ச்சியை, கடுமையாக ஆசிரியர் விமர்சனம் செய்கிறார். 1947ம் ஆண்டு தென் இந்தியத் திருச்சபை உருவாகியது. அதில் சேர விரும்பாத கொங்கிரிகேஷனல் சபையார் SOUTH INDIA CONGREGATIONAL CHURCHES S. I. C. C. என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். இன்றும் இந்த அமைப்பு நீடித்து வருகின்றது.

முதன்முதலாக தென் இந்தியத் திருச்சபையில் தென் திருவாங்கூர் பேராயராக தெரிவு செய்யப்பட்டவர் அதிவண "லெக்" (Rt. Rev. Legg) என்பவர். ஆனால் இவரின் பிரதிஷ்டையை ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

> "முதன் பிசப் சங்கைக்குரிய லெக் ஐயர் உண்மையிலே
> சபையாட்சி சபை விசுவாசத்தில் உறுதிப்பட்ட ஒரு
> போதகராக இருந்தபோதிலும் பிசப் பட்டம்
> கிடைக்கும் என்ற நம்பிக்கை கிடைத்தபோது,
> விசுவாசத்தை தற்கொலை செய்துவிட்டு பிசப் என்ற
> ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டார்."

இதைத் தொடர்ந்து C. S. I. கிறிஸ்தவர்களுக்கும் S. I. C. C. கிறிஸ்தவர்களுக்குமிடையில் நடந்த தகராறுகளை விளக்குகின்றார் ஆசிரியர். பின்வரும் நிறைவுரையோடு நூல் முடிவுறுகின்றது.

"S. I. C. C. சங்கத்தில் உத்தியோகஸ்தர்களாக இப்போது பணியாற்றுபவர்கள் சங். H. C. செல்வராஜ், தலைவர் சங். மோசஸ் சாம்ராஜ், உபதலைவர் திரு. J. கில்பர்ட் ஆசீஸ், காரியதரிசி திரு. து. சதர், பொருளாளர் திரு. ஜோப்றட் ஸ்டீபன்ஸ், நிர்வாகியாக பணியாற்றுகிறார்கள். S. I. C. C. இன் நாணயக் கமிற்றியில் திரு. எ. அருள்தாஸ் தலைவராக பணியாற்றி வருகிறார்கள். தென் இந்திய சபையாட்சி சபைச் சங்கம் (SICC) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இலங்கிப் பிரகாசிக்க தேவன் தாமே இருள்புரிவாராக."

இந்த நூல் நாம் அறியாத பல தகவல்களை, குறிப்பாக தெ. இ. திருச்சபையின் உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் பலவற்றை விளக்கி காட்டுகின்றது. S. I. C. C. கிறிஸ்தவர் C. S. I. யுடன் இணைவார்களா? அல்லது விரோதம் வளர்ந்து கொண்டு செல்லுமா? இதனை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

— வரலாற்று வாணர்

---

**எஸ். ஜே. எழுதுவது**

# கன்னியாகுமரியில் பிரதிஷ்டை விழா

கன்னியாகுமரி இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஒரு பிரதேசம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. காந்தி நினைவாலயமும், வள்ளுவர் சிலையும், விவேகானந்த கேந்திரமும் இதனை அழகு செய்கின்றன.

கன்னியாகுமரி இப்பொழுது ஒரு தனிப் பேராயமாக மாற்றப்பட்டுள்ளது. இதன் பேராயர் காரியாலயம் நாகர்கோவிலில் உள்ளது.

சென்ற மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இதன் புதிய பேராயராக அதி. வண. ஞானசிகாமணி தேவகடாட்சம் திருநிலைப்படுத்தப்பட்டார்.

15ம் திகதி காலை ஸ்ரீலங்கா விமானம் என்னைத் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்தது.

குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் என்னையும் கடவுச்சீட்டையும் கவனமாகப் பரிசீலனை செய்துவிட்டு உள்ளே செல்ல அனுமதித்தனர். செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற பயங்கரவாத சம்பவத்திற்குப் பின்னர் ஒவ்வொரு கடவுச்சீட்டும் கடுமையான பரிசீலனைக்கு உள்ளாகின்றது.

விமான நிலையத்திற்கு வெளியே கன்னியாகுமரி பேராயத்தின் கணக்காளர் திரு. ஸ்டீபன் அவர்களும் வரலாற்று ஆவணங்களின் காவலர் திரு. டேவிட் அவர்களும் "பிஷப் ஜெபநேசன்" என்ற அட்டையைப் பிடித்த வண்ணம் நின்றனர்.

பிரதிஷ்டை விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் கன்னியாகுமரி சிங்கார் ஹோட்டலில் தங்க ஏற்பாடு. பேராயர்கள், சினட் உத்தியோகத்தர்கள் பலர் ஏற்கனவே அங்கு வந்து விட்டனர்.

அடுத்த நாள் மாலை 2.30 மணிக்கு எல்லோரும் ஆயத்தமாய் இருங்கள். 3.30 மணிக்கு பிரதிஷ்டை ஆராதனை ஆரம்பமாகும் என்றார் திரு. ஸ்டீபன்.

ஞாயிறு மாலை 2.30 மணிக்கு எம்மை கன்னியாகுமரி ஹோம் சேர்ச்சிற்கு அழைத்துச் சென்றனர். ஹோம் சேர்ச் என்பது அவர்களின் பேராலயம். கொங்கிரிகேஷனல் மரபில் வளர்ந்து வந்த கன்னியாகுமரி ஆதீனம் இன்றும் தனது பிரதம ஆலயத்தை "ஹோம் சேர்ச் என்றே குறிப்பிடுகின்றது". "கதீட்ரல்" என்ற பெயர் இவர்களுக்குப் பிடிக்காதாம். இந்த ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆயிரம் பேர் வழிபடுவார்கள் என்று கூறினார்கள். இந்தியாவில் அதிக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் கூடும் ஆலயம் ஹோம் சேர்ச் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியாக 3.30 மணிக்கு பேராயர் பவனி (B) பாண்ட் முழக்கத்துடன் ஆரம்பமாகியது. ஆலயம் மக்களால் நிரம்பி வழிந்தது. நற்கருணை வழிபாட்டை யாழ்ப்பாணப் பேராயர் ஆரம்பித்தார். திருச்சிப் பேராயர் பிரசங்கம் செய்தார். பிரதம பேராயர் கே. ஜே. சாமுவேல் புதிய பேராயர் ஜீ. தேவகடாட்சத்தை திருநிலைப்படுத்தினார். பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. ஆண்களும், பெண்களும் குதூகலமாக இறைவனைத் துதித்து புதிய பேராயரை ஏற்றுக் கொண்டனர்.

மாலை ஆறு மணிக்கு ஆலய முன்றலில் பகிரங்கக் கூட்டம். தலைமைப் பேராயர், துணைத் தலைமைப் பேராயர், சினட் மகாசபைச் செயலாளர், வழக்கறிஞர் தர்மராஜ், வழக்கறிஞர் சத்தியதாஸ் ஆகியோர் பேசினார்கள்.

உற்சாகம் கரை கடந்து போய்க் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணப் பேராயரை பேசும்படி அழைத்தனர். யாழ்ப்பாணம் இந்த மறைமாவட்டத்தில் இருந்து 20 மைல் தொலைவில் தான் இருக்கின்றது என்றேன். பேராயர் தேவகடாட்சத்தின் கொழும்பு வருகையால் ஏற்கனவே நமது மக்கள் அவர் மீது பெருமதிப்புக் கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக பிரச்சனைப்பட்டுக் கொண்டிருந்த கன்னியாகுமரி மறைமாவட்டத்திற்கு இப்பொழுது ஒரு தலைவன் கிடைத்துவிட்டார். குமரி தேவகடாட்சத்தைப் பெற்றுக் கொண்டாள் என்றேன்.

கூட்டம் முடிந்தபின் பலர், நீங்கள் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் தான் பேசுவீர்கள் என்று எண்ணியிருந்தோம் என்றனர். அடுத்த நாள் திரு. ஸ்டீபன் திருவனந்தபுரத்திற்கு அருகிலிருந்த தமது வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார். குடும்பத்தினர் யாழ்ப்பாணப் பேராயர் மீது அன்பைப் பொழிந்தனர். திரு. ஸ்டீபன் அவர்களின் தகப்பனார் ஒரு வரலாற்று நூல் ஆசிரியர். இரவு நீண்டநேரம் உரையாடல். காலை 7.00 மணிக்கு கார் திருவனந்தபுரம் விமான நிலையம் நோக்கிப் பறந்தது.

## உதய தாரகை 12-10-2001

**தாரகை ஒளி:-**

*எண்ணங்களைப் பொறுத்து கெட்ட செய்கைகளும் நல்ல செய்கைகளும் உருவாகின்றன. கெட்ட எண்ணங்கள் உருவாவதை ஒருவன் தடுத்து நிறுத்திவிட்டால், கெட்ட செய்கைகளையும் அவன் சுலபமாக தவிர்த்துவிட முடியும்.*

— நோர்மன் வின்சென்ட் பீல்.

**ஆசிரியர் தலையங்கம்**

## ஆதீன விழா

1947ம் ஆண்டு செப்டெம்பர் 27 அன்று கிறிஸ்துவின் திருச்சபை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. திருச்சபையின் தலைவராகிய நமதாண்டவர் தமதடியார் "ஒன்றாயிருக்க வேண்டியதை" வலியுறுத்தினார். திருச்சபையின் முன்னோடிகளான பவுலடிகளார், பேதுரு அடிகளார் போன்றோரும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அங்கங்கள் இசைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்தியம்பினர். இருந்தும்கூட, சபையில் பிரிவுகளும் தொடர்ந்தன. திருச்சபைச் சீர்திருத்தத்தின் பின்னரும் (1517) பிரிவுகள் அதிகரித்தன. திருச்சபைச் சீர்திருத்தத்தின் பின்னர் "ஐக்கியக்" கோட்பாடு ஒரு பெருமளவிலான செயல்வடிவமாக்கப்பட்ட தினமாக இந்நாளை (செப்டெம்பர் 27, 1947) குறிப்பிடுவது பொருத்தமானதே. அன்றுதான் தென்னிந்தியத் திருச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஒரு புதிய திருச்சபை உருவானதென்றில்லாமல், பல பெரிய திருச்சபைகள் இணைந்து "ஒன்றாயின" என்பதே உண்மை. இத்திருச்சபை ஐக்கியத்தின் முன்னோடியாக தென்னிந்திய ஐக்கிய திருச்சபை **(S. I. U. C)** சில தசாப்தங்களாக இயங்கி வந்தது. இச்சபையும் மெதடிஸ்த, அங்கிலிக்கன், பிரஸ்பிட்டேரியன் சபைகளும் இணைந்து தென்னிந்திய திருச்சபை உருவாயிற்று. மேலைநாட்டவரின் அரும் பிரயாசத்தினால் "கிறிஸ்தவம்" கீழைத்தேய மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அன்று மேலை நாடுகளில் உருவாக்க முடியாதிருந்த "சபை ஐக்கியம்" கீழைத்தேசமொன்றில் மலர்ந்தது. இன்று மேலும் சில ஐக்கிய திருச்சபைகள் உலகில் உருவாகிவிட்டன. பல திருச்சபைகள் "சபை ஐக்கியத்துக்காக" தசாப்தங்களாக முயன்று கொண்டிருக்கின்றன.

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் ஆண்டுதோறும் செப்டெம்பர் 27ம் திகதியையொட்டி "ஆதீனவிழா" வை நடத்தி வருகின்றது. தென்னிந்தியத் திருச்சபையின் ஸ்தாபிதம், வளர்ச்சி, சாதனைகள் அனைத்தும் இந்நாளில் கடவுளுக்கு நன்றி செலுத்தி நினைவு கூரப்படுகின்றன.

திருச்சபையின்" ஐக்கியம் எனும் மாபெரும் கோட்பாட்டின் செயல்வடிவத்தின் வளர்ச்சியில் மகிழும் நாம், திருச்சபையின் வளர்ச்சி என்பது திருச்சபை ஐக்கியத்தின் வளர்ச்சியுடன் ஒருசேர நடைபெறவேண்டியதென்பதை மனதிலிருத்தி, மென்மேலும் சபைகள் மத்தியில் ஐக்கியமும், சபைமக்கள் மத்தியில் ஒருமைப்பாடும் வளர ஜெபத்துடன் உழைப்போமாக.

## பதின்நான்காம் ஆண்டு நிறைவுவிழா

### புனித தோமா ஆலயம், கோணாவில்

### விடுமுறை வேதாகம பயிற்சிப் பட்டறை

"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்
உன் பேரில் எனக்குக் குறை உண்டு

கோணாவில் திருச்சபையினுடைய பதின்நான்காம் ஆண்டு நிறைவில் சபைப் பிள்ளைகளுக்கான பத்துநாள் விடுமுறை வேதாகம பயிற்சிப் பட்டறை 05 – 08 – 2001 முதல் 15 – 08 – 2001 வரைக்கும் நடத்தப்பட்டது. வெளிப்படுத்தல் நூலில் இம்முறை வகுப்புகள் வைக்கப்பட்டன. பயிற்சிப் பட்டறை நடாத்தி போட்டிகள் வைக்கப்பட்டது. பாடல், கதை, நாடகம், வினாவிடை, வேதாகமப் புதிர்ப் போட்டி, கட்டுரை, வழிபாடு, விளையாட்டு, ஆண்பெண்களுக்கான மரதன் ஓட்டம், குழு விளையாட்டு, சித்திரம் என்பனவும் உளவளத்துணை உளவியல் அறிவூட்டும் நிறுவனக் குழுவினரின் அன்னை இல்லை இயக்குனர் வண பிதா Rev ரெஜினோல்ட் அவர்களால் சிறுவர் உளநல -பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது. பிள்ளைகள், வாலிபர்கள், தாய்மார்கள், தந்தைமாருக்கான தனித்தனியான ஆன்மீக உரைகளும் திருவிருந்து வழிபாடுகளும் நடத்தப்பட்டது. அருட்திரு ஜெரோம் போல், அருட் சகோ ஜோய் துரைராட்ணம், அருட்சகோதரி கிளடிஸ் ஜெயராட்ணம், அருட் சகோ. சதீஸ் டானியல், அருட்திரு போல் சுரேஷ், அருட்திரு ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து வழிபாடுகளையும் ஆன்மீக உரைகளையும் நிகழ்த்தினார்கள். 15 – 08 – 2001 ஆண்டு நிறைவு மாலை 5.00 மணிக்கு சபைக்குரு அருட்திரு ஜோன் செல்வம் திருவிருந்து வழிபாட்டை நடத்தியதோடு செய்தியை அருட்திரு ஞானப்பிரகாசம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் போட்டிகளும், பட்டிமன்றம் (உலகத்தில் தீமை பரவுவது சாத்தானின் செயலா? அல்லது கடவுளின் செயலா?) விவாத அரங்கும் கலை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன. விடுமுறை வேதாகம பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட 30 பிள்ளைகளுக்கும் பரிசுகளும், போட்டிகளில் பங்குபற்றி திறம்பட செயற்பட்டோருக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டது. இரவு 11.00 மணிக்கு அருட்திரு. ஞானப்பிரகாசம் அவர்களின் ஆசீர்வாதத்துடன் யாவும் நிறைவுபெற்றது. 01 – 09 – 2001 அன்று நடைபெற்ற வன்னிப் பிராந்திய தென்னிந்தியத் திருச்சபையினால் நடத்தப்பட்ட பிள்ளைகள் விழாவில் குழு பாடல் போட்டியில் முதலாம் இடத்தையும், 16 வயதின் கீழ் புதிர் போட்டியில் முதலாம் இடத்தையும் அதே வயதின் கீழ் தனிப்பாடல் போட்டியில் செ. ஜெயநேசன் முதலாம் இடத்தையும் 12 வயதின் கீழ் புதிர் போட்டியில் மூன்றாம் இடத்தையும் சபையார் பாடல் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றார்கள். பிள்ளைகளையும் சபை மக்களையும் நன்றியுடன் பாராட்டுகிறோம். இறை ஆசி என்றும் யாவருடனும் தங்குவதாக.

நன்றி.

— அருட்திரு. ஜோன். S. செல்வம், சபைக்குரு

## இறை சித்தம்

உலகில் நடைபெறும் காரியங்கள் அனைத்தும் இறைசித்தம் என்பதாக தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. உலகில் நடைபெறும் மனிதனின் செயற்பாடுகள், இயற்கை அனர்த்தங்கள், தற்செயற் சம்பவங்கள், இறப்புக்கள், அகால மரணங்கள் போன்ற அனைத்து சம்பவங்களும் இறைசித்தம் என பலராலும் விளக்கப்படுகின்றன.

"அவனின்றி அணுவும் அசையாது", "இறைவனே அனைத்திற்கும் காரணர்" என இறைவனை நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம். எனவே அனைத்தையும் இறைசித்தம் என்பது இறைவன் குறித்த எமது தவறான புரிந்து கொள்ளலேயன்றி வேறல்ல.

இறைவன் இவ்வுலகினைப் படைத்து அதனை நன்மையானது எனக் கண்டார். இறைவனின் படைப்பில் மேலானவனாக படைக்கப்பட்ட மனிதன் தன் சுயாதீனத்தைப் பயன்படுத்தி இறைவனின் படைப்பை மாசுபடுத்தினான். இவ்வாறு மாசுபடுத்தியதன் விளைவாக ஏற்பட்ட விளைவுகளை இறைவன் மேலேயே சுமத்தி அவற்றுக்கு "இறைசித்தம்" என நாமம் சூட்டிவிட்டான்.

இயற்கையில் நடைபெறும் இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, கடற்பெருக்கு, காட்டுத்தீ போன்றவை மனிதன் இயற்கைச் சமநிலையைக் குலைத்து சூழலுக்கு தீங்கேற்படுத்தியதனால் ஏற்பட்ட விளைவுகளே என்பதனை மறந்துவிட்டான். இதை மறந்தவனாக, அவை ஏற்படும் உண்மையான காரணத்தைக் கண்டு அறிய முயலாது இறைவன்மேல் குற்றத்தை சுமத்தி பலவேளைகளிலும் அவை இறைகோபம், இறைசித்தம் என கிறிஸ்தவர்களாகிய எம்மிற் பலரும் தவறாகப் புரிந்து கொள்ளுகிறோம்.

இவ்வாறே திடீர் இறப்புக்கள்,அகால மரணங்கள் இறைசித்தம் என பலராலும் தவறாக விளங்கப்படுகின்றது.

உலகில் வாழும் மனிதர் எவரும் தனித்து இயங்குபவர் அல்லர். மனிதன் ஓர் சமூக விலங்காகும். எனவே ஒரு மனிதனின் தவறு தவறற்ற பிற மனிதனிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் செயல்கள் வேறு எங்கோ ஓரிடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இன்று விஞ்ஞான பூர்வமாக இவை நிரூபிக்கப்படுகின்றன.

எனவே உலகில் நடைபெறும் சம்பவங்களுக்குரிய காரணத்தை அறிந்து கொள்வது இன்றியமையாதது. இதற்காகவே மனிதனுக்கு சுயாதீனம் கொடுக்கப்பட்டது. மாறாக நிகழ்வுகள் யாவற்றையும் இறைசித்தம் என்று கூறுவதற்கு அன்று.

ஆகவே இறைசித்தம் என்பது என்ன? அன்புள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவையே இறைசித்தமாகும்.

ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்தி சொல்லுவதும், திடனற்றவர்களைத் தேற்றுவதும், பலவீனரைத் தாங்குவதும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருப்பதும், தீமைக்கு தீமை செய்யாதபடி பார்ப்பதும், எப்பொழுதும் நன்மை செய்ய நாடுவதும், எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதும், இடைவிடாமல் ஜெபம் பண்ணுவதும், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்வதுமே இறைசித்தமாயிருக்கிறது.

அன்பற்ற செயல்கள், நீதியற்ற செயல்கள், அழிவுக்குரித்தான செயல்கள், தீமைக்கேதுவான செயல்கள், துக்கத்திற்குரித்தான செயல்கள் சம்பவங்கள் இறைசித்தமல்ல என்பதனை நாம் புரிந்து கொள்ளல் அவசியம்.

**D. S. Solomon**

## Chundikuli Girls' College.

The Prize Giving Day of The Chundikuli Girls' College was held on the 15th of September 2001. Dr. Arul Anketell graced the function as the chief guest. The topic of his speech, 'FORWARD for TRANSFORMATION' was based on the motto of the college which is "FORWARD". In his speech he stated that God's intention for human life is to achieve wholeness amidst the brokenness of this world. The College should have this aspect as its goal to achieve this glorious goal that is the will of God.

He highlighted 5 inward attitudes that are stepping- stones to the process of transformation. They are ' a sense of identity, integrity, the area of work and leisure, our response to pain and suffering, and the attitude of giving and sacrifice'.

The manageress Mrs. Rajasingam, The Chaplain Rev. Nesakumar, and The President of OGA Dr.Ponnudurai were among the distinguished guests who were present at the function. Mrs. Rajaratnam the principal of the College, presented the annual report.

## Vembadi Girls' College.

The annual Prize Giving of the Vembadi Girls' College was held on the 28th of September at Mabel Thambayah Hall. Mr. K.Kanagaratnam Bursar of the University of Jaffna and Mrs. Kanagaratnam were invited as the the chief guests. In her annual report, the principal Mrs. Ponnampalam mentioned the achievements of the students. In the G.C.E [O.L] examination, eight students have obtained ten distinctions and 8 students have entered the medical college. The teachers and the students have to be congratulated for the achievements for working hard amidst the uncongenial circumstances.

## Farewell to the Rev.M.Karunakaran

The people of our Diocese gave the Rev. M.Karunakaran, who was ministering to the Jaffna Diocese of the Church of South India for the last three months, a grand farewell on the 1st of September at the Green Memorial hospital premises. The Bishop with a 'pon aadai' honored him. Rev.Rajkumar presented a golden ring, on behalf of the workers' union as a token of appreciation of his ministry. A gift of a'Vaazlththup pa' composed by Mr. Jeyaseelan, was sung by Mr. Thevamithiran. During his stay in Jaffna, Rev. Karunakaran had been helping the churches in organizing programmes in 'Karnatic Music' concentrating on reviving the old Christian lyrics. He is a lecturer in Karnartic Music at the Tamil Nadu Theological Seminary, Madurai.

## EDITORIAL

### "FOR THE SAKE OF THE GRACE GIVEN TO ME"

Time passes quite fast that it is hard to think that Tenth of October is the fourth death anniversary of our dear Bishop D.J. Ambalavanar. "For the sake of the grace given to me" was the title chosen for the *Festschrift* on bishop soon after he retired as the second bishop of the Jaffna Diocese of the Church of South India. I was honoured to have been part of the process of this noble task of bringing out a volume in honour of a person who was much loved by all.

The title was chosen from Romans 15:15. Usually it is translated as "because of the grace..." However, having analyzed the original text we came out with the present title which has a profound meaning that fits so well to the greatest contribution made by this great man. The Greek preposition *dia* when followed by an accusative, in this case *ten charin*, has to be translated as we have put it. According to Paul, "grace" and "vocation" go hand in hand. Bishop Ambalavanar understood his mission as something that has always been a manifestation of God's grace. However, he rightly perceived that this grace called him to hard pilgrimage, to costly discipleship. For him, it necessarily elicited and enabled a life of faith and love in solidarity with others. Such grace, in the words of Dietrich Bonhoeffer, whom bishop Ambalavanar often quoted in his homilies, "is *costly* because it calls us to follow, and it is *grace* because it calls us to follow Jesus Christ... Above all, it is *costly* because it cost God the life of his Son." Of the many aspects of the powerful demonstration of God's love in the ministry of the bishop few stand quite explicit that people continue to remember this man with gratitude to God. First of all, his commitment to see the world from the perspective of the poor and the marginalized. He always believed in the hermeneutics that called for application and not that which talked about explanation for the plight of the poor and the needy. "Faith Seeking Understanding" was the thriving force behind his great 'vision' for humanity that his conception of the church and its mission was none other than "An Ecclesiology of New Humanity."

Secondly, bishop Ambalavanar always championed the cause of the Tamils. He grasped every single opportunity to assert the inalienable rights of the Tamils for self-determination. He strongly believed in the "*Thimbu Principle.*" In the context of pains and sorrows of our people, Bishop asserted that the Advocacy for Justice and Peace is our path to God's Reign of Harmony and Solidarity. It is of pertinence that Dr Ernest A. Champion described him as "A Just Man for a Just Cause." Thirdly, one could boldly say that the peak of his tenure as the bishop of Jaffna Diocese was the establishment of a Seminary in Jaffna where theological formation could be given in one's own context.

It is said of Dr Albert Schweitzer that the greatest contribution he made to the society was not what he did by himself but what others had done because of him. Truly, bishop Ambalavanar's great contribution to the church and to the society at large could be realized in what we continue to do because of the "heavenly vision" this man had and saw that it was realized in his ministry "for the sake of grace given to him by God."

**Daniel S. Thiagarajah**

## 2ND YEAR REMEMBRANCE

(27TH September 2001)

### MRS. PARAMSOTHYAMMAL AIYATHURAI



**E'en for the dead I will not**
**bind my soul to grief;**
**Death cannot long divide,**
**For it is not as though the rose**
**that climbed my garden wall**
**Has blossomed on the other side?**

**Death does hide,**
**But not divide;**
**You are but on Christ's other side!**
**You are with Christ, and Christ with me;**
**In Christ united still are we.**

**Dearest Ammah,**

**You have left behind a legacy**
**which time cannot obliterate.**
**Affectionately remembered**
**By**
**Children, Sons in Law, Daughters in Law**
**Grandchildren and loved ones.**
**4, Ebert Place, Colombo 05.**

## APPRECIATION

### BREDA

Breda, the Daughter-in-law of Mr.&Mrs, A.Y.Rajaratnam and a long time reader of the Morning Star passed away in England. Breda was the only daughter of the late Mr. Morresey James and of Mrs Julia Morresey of Ireland She had two loving younger brothers, Michael and Richard. Breda and Joe met each other while they were studying in Ireland . Later they got united in holy matrimony in September 1987. Breda joined Barclays Bank in 1988 and worked there until she died. She was involved in voluntary word for Sutton Council, looking after patients suffering from Alzheimer's disease. She also devoted herself to Church activities.

Breda was the embodiment of love and affection. Though she belonged to a totally different culture and background she became an integral part of the entire family and friends, that it is extremely difficult to accept her untimely death. She proved herself to be a very loving wife, and an affectionate daughter-in-law and sister in law. Breda will be sadly missed by a large number of relations and friends with whom she kept in touch. May her soul find the well deserved eternal rest and peace in the hands of Jesus.

By: Mr.R.J.Gunaratnam.

### 1st Page Cont'd

Andra Pradesh, India, saw God's spirit in him when he was very young, and all those whom he served and lead knew how the Spirit of God moved through him to spread the Good News of Jesus into areas far beyond the Jaffna Peninsula, by establishing churches and institutions to serve the poorest and the people most afflicted by the protracted civil war. As a youth, Bishop Ambalavanar was an evangelist in the YMCA at Jaffna College, in which he was the only student in its history to be President.

As a student at Jaffna College he was a leader in the Student Christian Movement and other youth and world organizations. His involvement in Christian organizations worldwide broadened as Bishop to offers of high positions in the CSI, and participation in organizations such as the Christian Council of Asia and the World Council of Churches. Yet his first and most committed loyalty was to the Tamils of Sri Lanka with whom, as shepherd, he suffered all the anguish, pain, and suffering of his flock, becoming a symbol of faith and hope. One of his much-loved quotes was, "When the going gets tough, the tough get going."

Because Bishop Ambalavanar was able to harmonize his Christian and Tamil identities, when "the shadow of the cross fell on the Tamil people" he stood as a model for Tamils: Christians, Hindus and Muslems. But his compassion extended, even as Christ taught us, to his enemies. He was concerned that understandable Tamil anger not be turned against innocent Sinhala people or the paid soldiers of the government who only executed orders from above.

As a youth, Bishop Ambalavanar excelled in academics, oratory, creative writing, scouting and sports. As an adult he spoke and wrote with moving eloquence, grounded in his vast knowledge gained from his extensive reading, even when his days were so full. Rev. Bubsy Arulampalam of the United Church of Australia says Bishop Ambalavanar was "a man who dared to dream", and his type of dream took courage and had practical applications."He was a visionary and a careful planner", says Rev. S. Jeyanesan. He encouraged his pastors to dream so they thought big and acted accordingly. He was also an enthusiastic gardener as a boy and later his first project was starting Varany Farm in 1973. As a young student at Serampore Seminary, young D.J. Ambalavanar was turned to as a mediator among his fellow students because of his experience, knowledge, and sense of humor, and later as Bishop be became an arbiter even at the WCC.

Bishop Ambalavanar's father died when his four children were still very young, so D.J. stepped in to became both father and brother to his younger siblings. On a small pastor's widow's salary money was tight but the bishop saw to it that he educated himself and his brother, influencing him to become a missionary with the Council of World Missions in the Central Pacific. As bishop he saw to it that the pastor's widow's pensions were increased and set up Boys' and Girls' Homes for the fatherless and orphans. He also started Homes for Handicapped Children, Day Care Centres, Vocational Training Centres, Housing Projects and a mobile clinic. Mr. Rajan Kadirgamar says that Bishop sought 'the lost, the last, and the least". During the political & social upheavals, says Rev. Dr. W.G. Wickramasinghe, "in his wisdom he called for drastic changes in a structure which confined some segments of society to a sub-human level of existence." The CSI became a church for people of all walks of life and all social backgrounds. To prepare pastors to serve this growing church Bishop Ambalavanar started the Christian Theological Seminary from which young men, and later women, from all strata of society have been sent forth in the name of the Lord Jesus Christ to minister to his people. And so we pay tribute to these two revered leaders whose influence continues to inspire us and whose Christian faith and works are an example to us all.

Grace Bunker

Quotations are from

"In Obedience to the Heavenly Vision and Dr. Samuel Fiske Green".

### Thought for the day

**History is populated by tyrants who have done the inconceivable. And the button exists.**

In Search of Man, Documentary by ABC and Wolper Productions.

Printed for the American Ceylon Mission, Diocesan Office, Vaddukoddai, Sri Lanka.